05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# சிவபுராணத்தில் தளையியல் சிந்தனைகளும் மலேசிய சமய ஆசிரியர்களின் அதன் புரிதலும் ஓர் ஆய்வு

# A STUDY OF THALAIYIAL IN SIVAPURANAM AND THE UNDERSTANDING AMONG MALAYSIAN RELIGIOUS TEACHERS

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**வாசுதேவன் இலக்குமணன்**
**VASUDEVAN A/L LETCHUMANAN**

**SULTAN IDRIS EDUCATION UNIVERSITY**
**2021**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# சிவபுராணத்தில் தளையியல் சிந்தனைகளும் மலேசிய சமய ஆசிரியர்களின் அதன் புரிதலும் ஓர் ஆய்வு
# A STUDY OF THALAIYIAL IN SIVAPURANAM AND THE UNDERSTANDING AMONG MALAYSIAN RELIGIOUS TEACHERS

வாசுதேவன் இலக்குமணன்
VASUDEVAN A/L LETCHUMANAN

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

DISSERTATION PRESENTED TO QUALIFY FOR A MASTER'S DEGREE IN ARTS (TAMIL LITERATURE)
(RESEARCH MODE)

FACULTY OF LANGUAGE AND COMMUNICATION
SULTAN IDRIS EDUCATIOAN UNIVERSITY

2021

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UPSI/IPS-3/BO 32
Pind : 00 m/s: 1/1

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

Please tick (√)
Project Paper
Masters by Research ✓
Master by Mixed Mode
PhD

**INSTITUTE OF GRADUATE STUDIES**

**DECLARATION OF ORIGINAL WORK**

This declaration is made on the 15 day of MAC 20 21

i. **Student's Declaration:**

I, VASUDEVAN A/L LETCHUMANAN (M20142002407) / FACULTY OF LANGUAGE AND COMMUNICATION (PLEASE INDICATE STUDENT'S NAME, MATRIC NO. AND FACULTY) hereby declare that the work entitled A STUDY OF THALAIYIAL IN SIVAPURANAM AND THE UNDERSTANDING AMONG MALAYSIAN RELIGIOUS TEACHERS is my original work. I have not copied from any other students' work or from any other sources except where due reference or acknowledgement is made explicitly in the text, nor has any part been written for me by another person.

Signature of the student

ii. **Supervisor's Declaration:**

I Dr. FRANKLIN THAMBI JOSE.S (SUPERVISOR'S NAME) hereby certifies that the work entitled A STUDY OF THALAIYIAL IN SIVAPURANAM AND THE UNDERSTANDING AMONG MALAYSIAN RELIGIOUS TEACHERS (TITLE) was prepared by the above named student, and was submitted to the Institute of Graduate Studies as a * partial/full fulfillment for the conferment of A MASTER'S DEGREE IN ARTS (PLEASE INDICATE THE DEGREE), and the aforementioned work, to the best of my knowledge, is the said student's work.

02.04.2021
Date

Signature of the Supervisor

DR. FRANKLIN THAMBI JOSE.S (PhD)
PENSYARAH KANAN
FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
PERAK, MALAYSIA

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

**INSTITUT PENGAJIAN SISWAZAH /**
***INSTITUTE OF GRADUATE STUDIES***

**BORANG PENGESAHAN PENYERAHAN TESIS/DISERTASI/LAPORAN KERTAS PROJEK**
***DECLARATION OF THESIS/DISSERTATION/PROJECT PAPER FORM***

Tajuk / *Title*: A STUDY OF THALAIYIAL IN SIVAPURANAM AND THE UNDERSTANDING AMONG MALAYSIAN RELIGIOUS TEACHERS

No. Matrik /*Matric's No.*: M 20142002407

Saya / *I* : VASUDEVAN A/L LETCHUMANAN

(Nama pelajar / *Student's Name*)

mengaku membenarkan Tesis/Disertasi/Laporan Kertas Projek (Kedoktoran/Sarjana)* ini disimpan di Universiti Pendidikan Sultan Idris (Perpustakaan Tuanku Bainun) dengan syarat-syarat kegunaan seperti berikut:-
*acknowledged that Universiti Pendidikan Sultan Idris (Tuanku Bainun Library) reserves the right as follows:-*

1. Tesis/Disertasi/Laporan Kertas Projek ini adalah hak milik UPSI.
   *The thesis is the property of Universiti Pendidikan Sultan Idris*

2. Perpustakaan Tuanku Bainun dibenarkan membuat salinan untuk tujuan rujukan dan penyelidikan.
   *Tuanku Bainun Library has the right to make copies for the purpose of reference and research.*

3. Perpustakaan dibenarkan membuat salinan Tesis/Disertasi ini sebagai bahan pertukaran antara Institusi Pengajian Tinggi.
   *The Library has the right to make copies of the thesis for academic exchange.*

4. Sila tandakan ( √ ) bagi pilihan kategori di bawah / *Please tick ( √ ) for category below:-*

| | | |
|---|---|---|
| ☐ | **SULIT/*CONFIDENTIAL*** | Mengandungi maklumat yang berdarjah keselamatan atau kepentingan Malaysia seperti yang termaktub dalam Akta Rahsia Rasmi 1972. / *Contains confidential information under the Official Secret Act 1972* |
| ☐ | **TERHAD/*RESTRICTED*** | Mengandungi maklumat terhad yang telah ditentukan oleh organisasi/badan di mana penyelidikan ini dijalankan. / *Contains restircted information as specified by the organization where research was done.* |
| ☑ | **TIDAK TERHAD / *OPEN ACCESS*** | |

(Tandatangan Pelajar/ Signature)

(Tandatangan Penyelia / *Signature of Supervisor*)
& (Nama & Cop Rasmi / *Name & Official Stamp*)

DR. FRANKLIN THAMBI JOSE.S (PhD)
PENSYARAH KANAN
FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
PERAK, MALAYSIA

Tarikh: 02.04.2021

Catatan: Jika Tesis/Disertasi ini **SULIT @ TERHAD**, sila lampirkan surat daripada pihak berkuasa/organisasi berkenaan dengan menyatakan sekali sebab dan tempoh laporan ini perlu dikelaskan sebagai **SULIT** dan **TERHAD**.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



**நன்றியுரை**


சிவசிவ

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
ஆறங்கமுதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வர்க்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக் கப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்
(திருவிளையாடற் புராணம் – பாடல் – பதின்மூன்று)

கனிந்த வணக்கம். ஏக இறையருள் சித்திக்கட்டும்; வளம் பெற இறைஞ்சுகிறேன். இவ்வேளையில் எனது முதுகலை ஆய்வு சிறப்பாக அமைந்திட அவ்வப்போது ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக, எனது முதன்மை நெறியாளர் முனைவர் பிராங்களின் தம்பி ஜோஸ் செலிஸ்டஸ் டார்லிங் அவர்களுக்கும் மற்றும் இணை நெறியாளர் முனைவர் காமினி கணபதி அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனது மரியாதைக்குரிய பேராசிரியர்களின் சிறப்பான வழிகாட்டுதலின் வழியே இவ்வாய்வு நேர்த்தி அடைந்துள்ளது. பல்வேறு பணிகளுக்கு இடையிலும் அயராது எமக்கு வழிகாட்டிய முதன்மை நெறியாளரின் பணிகள், ஆலோசனைகள் போற்றுதலுக்குரியன. மேலும், எனது ஆய்வுப் பணிகளுக்குப் பல வகையிலும் உதவியாக இருந்த குடும்ப உறவுகள், நண்பர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் அனைவருக்கும் இவ்வேளையில் உள்ளம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நன்றி வணக்கம்.


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# சிவபுராணத்தில் தளையியல் சிந்தனைகளும் மலேசிய சமய ஆசிரியர்களின் அதன் புரிதலும் ஓர் ஆய்வு

## ஆய்வுச் சாரம்

இவ்வாய்வின் நோக்கம், சிவபுராணத்தில் தளையியல் சிந்தனைகளை எவ்வாறு மலேசிய சமய ஆசிரியர்கள் உணர்ந்தும் புரிந்தும் கொண்டுள்ளனர் என்பதை ஆராய்வதாகும். மேலும் சமய ஆசிரியர்களிடையே சைவ சித்தாந்தத்தின் புரிதலை மேம்படுத்த, சிவஞானபோதம் கோட்பாட்டின் அடிப்படையில் சாதன இயலின் மூன்று பொருண்மைகளான உயிரியல், மலத்தியல், மாயையியல் ஆகியன பயன்படுத்தப்பட்டன. ஆய்வின் முதல் இரு நோகங்களை அடைய நூலக ஆய்வு, விளக்கமுறை, பகுப்பாய்வு முறைகள் பயன்பட்டன. மூன்றாம் நோக்கத்தை அடைய கள ஆய்வில் நேர்க்காணல் அணுகுமுறை, ஆய்வு நெறியாகப் பயன்படுத்தப்பட்டது. கள ஆய்வில், பதினொன்று சமய ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களிடம் சிவபுராணத்தின் தளையியல் சார்ந்த பத்து கேள்விகள் நேர்க்காணல் ஆய்வுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டு, அவர்களின் தளையியல் சிந்தனைகளும் புரிதலும் பகுத்தாராயப்பட்டது. ஆய்வு முடிவுகளாக, சிவபுராணத்தின் தொண்ணூற்று ஐந்து வரிகளில், அறுபத்து ஆறு வரிகளில் தளையியல் சிந்தனைகளும் கருத்துகளும் உள்ளன என்பதைப் பகுத்தாயாந்து கண்டறியப்பட்டுள்ளன. இதன்வழி சமய ஆசிரியர்களிடம் காணப்படும் சித்தாந்த தளையியல் தெளிவின்மை குறைக்கப்பட வாய்ப்புள்ளது. மேலும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய தளையியல் கூறுகளை ஆழமாகப் புரிந்து கொள்வதன் வழி மலேசிய சமய ஆசிரியர்களிடம் தளையியல் புரிதல் வளர்ச்சி காணமுடியும். இவ்வாய்வானது, சிவபுராண பாட்டின் பொருளுணர்ந்து புரிந்து கொள்வதன் வழி, தளையியல் கட்டுகளிலிருந்து ‘ஆன்ம விடுதலை’ பெற்று தனிநபர், குடும்பம், சமூகம் என விளைபயன் மிக்க ஆன்மிக மாற்றங்கள் நிகழ வழிகோலும். மாணிக்கவாசகரின் ஏனைய திருவாசகப் பாடல்களில் தளையியல் சார்ந்த விரிவான தொடர் ஆய்வுகள் மேற்கொள்வதன் வழி சித்தாந்த சிந்தனைகள் வளர்ச்சியடைவதை உறுதி செய்யமுடியும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



# KAJIAN THALAIYIAL DALAM SIVAPURANAM DAN PEMAHAMAN DI KALANGAN GURU-GURU AGAMA MALAYSIA

## ABSTRAK

Objektif kajian ini ialah untuk mengenalpasti *Thalaiyial* dalam *Sivapuranam*, menganalisis *Thalaiyial* yang dikenalpasti dengan menggunakan *Sivagnana Botham* dan untuk mengenali pemahaman *Thalaiyial* di kalangan guru-guru agama Malaysia. Idea major adalah untuk mengatasi isu ketidakfahaman konsep *Saiva Siddhanta* menerusi tiga entiti *Sadhana Iyal* dalam teori *Sivagnyana Botham* yakni, *Uyiriyal, Malathiyal dan Mayayial*. Reka bentuk kajian gabungan telah diaplikasikan dalam kajian ini. Kedua-dua penyelidikan kualitatif dan kuantitatif telah digunakan dalam kajian ini. Pendekatan kualitatif digunakan untuk mencapai persoalan kajian pertama dan kedua manakala pendekatan kuantitatif dipilih sebagai metod kajian untuk menjawab persoalan kajian ketiga. Puisi *Sivapuranam* dibaca dan konsep Thalaiyial telah dikenalpasti serta dianalisis. Seramai 11 orang guru agama dipilih untuk menjawab soal selidik melalui temubual. Instrumen set soal selidik kajian ini mengandungi 10 soalan. Dapatan kajian menunjukkan bahawa sebanyak 66 baris yang mengandungi elemen *Anava*, *Kanmam* dan *Maya* berkonsepkan *Thalaiyial* dikenalpasti dalam *Sivapuranam*. Selanjutnya, isu salah pengertian dan tahap ketidakfahaman konsep *Thalaiyial* di kalangan guru-guru agama turut dikenali. Hasil kajian ini membuat kesimpulan bahawa, konsep *Thalaiyial* dikenali dalam *Sivapuranam* dan guru-guru agama di Malaysia mempunyai isu salah pengertian serta ketidakfahaman konsep *Thalaiyial.* Implikasi kajian menunjukkan penggunaan serta penghayatan *Thalaiyial* dalam *Sivapuranam* akan dapat membanteras kongkongan *atma*(jiwa) untuk meningkatkan tahap spiritual, baik secara individu, mahupun dalam keluarga dan komuniti secara umumnya.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# A STUDY OF THALAIYIAL IN SIVAPURANAM AND THE UNDERSTANDING AMONG MALAYSIAN RELIGIOUS TEACHERS

## ABSTRACT

The objectives of the study were to identify *Thalaiyial* in *Sivapuranam*, to analyse the identified *Thalaiyial* using *Sivagnana Botham* and to know the understanding of *Thalaiyial* among Malaysian religious teachers. The major idea was to overcome the misconception issue on *Saiva Siddhanta* with the three *Sadhana Iyal's* entity namely *Uyiriyal*, *Malathiyal* and *Mayayial* of *Sivagnana Botham* theory. Mixed method of research was applied in this study. Both qualitative and quantitative approaches of research were used. The former was used to achieve the first two research objectives whereas the latter was used to achieve the third research objective of the study. The poem *Sivapuranam* was read and the *Thalaiyial* concepts were identified and analysed. Moreover, 11 religious teachers were selected and interviewed with a questionnaire. The instrument of the study was questionnaire with a set of 10 questions. The findings of the study were, 66 lines of *Thalaiyial* concepts in *Sivapuranam* were identified and the elements such as *Anavam*, *Kanmam* and *Maya* are found in the *Thalaiyial* concepts. Moreover, misconception and understanding levels of the *Thalaiyial* concepts among the religious teachers were known. The study concluded that *Thalaiyial* concepts are found in *Sivapuranam* and the Malaysian religious teachers have issues in understanding the concepts of *Thalaiyial*. The study implicated that the usage of *Thalaiyial* of *Sivapuranam* was to eradicate soul bondages which can enhance the spiritual upliftment as an individual, family and community.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| **ஆய்வாளர் உறுதிமொழி** | | ii |
| **DECLARATION OF DISSERTATION** | | iii |
| **நன்றியுரை** | | iv |
| **ஆய்வுச் சாரம் : தமிழ் மொழி** | | v |
| **ஆய்வுச் சாரம் : மலாய் மொழி(ABSTRAK)** | | vi |
| **ஆய்வுச் சாரம் : ஆங்கிலம்(ABSTRACT)** | | vii |
| **பொருளடக்கம்** | | viii |
| **வரைபடப் பட்டியல்** | | ix |
| **அட்டவணைப் பட்டியல்** | | x |
| **குறிவரைவுப் பட்டியல்** | | xi |
| **இயல் 1.0** | **அறிமுகம்** | |
| 1.1 | முன்னுரை | 1 |
| 1.2 | ஆய்வுப் பின்னணி | 3 |
| 1.3 | ஆய்வுச் சிக்கல் | 8 |
| 1.4 | ஆய்வு நோக்கம் | 14 |
| 1.5 | ஆய்வு வினா | 14 |
| 1.6 | ஆய்வு முக்கியத்துவம் | 15 |
| 1.7 | ஆய்வு எல்லை | 17 |
| 1.8 | ஆய்வுச் சான்றாதாரங்கள் | 18 |
| 1.9 | கலைச்சொல் விளக்கம் | 19 |
| 1.9.1 | சைவ சமயம் | 19 |
| 1.9.2 | திருவசகம் – சிவபுராணம் | 19 |
| 1.9.3 | சிவஞானபோதம் | 20 |
| 1.9.4 | சைவ சித்தாந்தம் | 21 |
| 1.9.5 | இறைவன்(பதி) | 21 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



1.9.6 உயிர்(பசு) 22

1.9.7 தளை(பாசம்) 23

1.9.8 ஆணவம் 23

1.9.9 கன்மம் 24

1.9.10 மாயை 25

1.10 தொகுப்புரை 26

**இயல் 2.0 மீள்நோக்கு ஆய்வுகள்**

2.1 முன்னுரை 27

2.2 பணடைத் தமிழர்களின் சமய வாழ்க்கை 28

2.3 சைவம் 30

2.3.1 சைவ சமய பொது நோக்கு 31

2.4 சைவ சித்தாந்தம் 33

2.4.1 மெய்கண்ட சாத்திரங்கள் 34

2.5 சைவ சித்தாந்தக் கோட்பாடும் கொள்கை வளர்ச்சியும் 36

2.5.1 மெய்கண்டார் 36

2.5.2 சிவஞானபோதம் 36

2.6 தளைகள் 37

2.6.1 ஆணவம் 38

2.6.2 கன்மம் 39

2.6.3 மாயை 40

2.7 மாணிக்கவாசகரும் திருவாசகமும் 40

2.7.1 மாணிக்கவாசகர் பாடல்களில் சித்தாந்தக் கோட்பாடுகள் 41

2.8 சிவஞானபோதம் 42

2.9 மலேசியாவில் சைவ சித்தாந்தச் சிந்தனைப் போக்கு 42

2.10 முந்தைய ஆய்வுகள் 46

2.10.1 சைவ சித்தாந்தம் ஒட்டிய ஆய்வுகள் 47

2.10.2 ஆய்வடங்கல்கள் 49


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



| | | |
|---|---|---|
| 2.11 | முந்தைய ஆய்வின் பயன்பாடு | 55 |
| 2.12 | தொகுப்புரை | 55 |
| **இயல் 3.0** | **ஆய்வு நெறிமுறை** | |
| 3.1 | முன்னுரை | 56 |
| 3.2 | ஆய்வு வடிவமைப்பு | 57 |
| 3.3 | ஆய்வுக் கட்டமைப்பு | 59 |
| 3.4 | ஆய்வு அணுகுமுறை | 60 |
| | 3.4.1 நூலக ஆய்வு | 60 |
| | 3.4.2 விளக்கமுறை | 62 |
| | 3.4.3 பகுப்பாய்வுமுறை | 62 |
| | 3.4.4 கள ஆய்வு முறை | 63 |
| 3.5 | தரவுகள் சேகரிக்கும் முறைமை | 64 |
| 3.6 | தரவுகள் பகுப்பாய்வு முறைமை | 65 |
| 3.7 | ஆய்வுக் கோட்பாடு | 66 |
| 3.8 | ஆய்வு நடைமுறை | 68 |
| | 3.8.1 ஆய்வு நடைமுறை | 69 |
| 3.9 | கோட்பாட்டு வடிவமைப்பு | 70 |
| 3.10 | தொகுப்புரை | 71 |
| **இயல் 4.0** | **பகுப்பாய்வுகளும் கண்டுபிடிப்புகளும்** | |
| 4.1 | முன்னுரை | 72 |
| 4.2 | சிவபுராணத்தில் சிவஞானபோதம் கோட்பாட்டின் அடிப்படையில் தளையியல் கண்டறிதல் | 75 |
| 4.3 | சிவபுராணத்தில் சிவஞானபோதம் கோட்பாட்டின் அடிப்படையில் கண்டறிந்த தளையியலைப் பகுத்தாராய்தல் | 82 |
| 4.4 | தொகுப்புரை | 174 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**இயல் 5.0 நேர்க்காணல் பகுப்பாய்வுகளும் கண்டுபிடிப்புகளும்**

5.1 முன்னுரை 175

5.2 சிவபுராணத்தில் தளையியல் சிந்தனைகளும் சமய ஆசிரியர்களின் அதன் புரிதலும் : நேர்க்காணல் பகுப்பாய்வு 176

5.3 நேர்க்காணல் முடிவுகள் 206

5.4 தொகுப்புரை 212

**இயல் 6.0 ஆய்வுக் கருத்தாடல்களும் முடிவுகளும்**

6.1 முன்னுரை 213

6.2 ஆய்வு முன்னறிவு 214

6.3 ஆய்வுக் கண்டறிவு 216

6.4 தொடர் ஆய்வுக்கான பரிந்துரைகள் 224

6.5 முடிவுரை 225

துணை நூற்பட்டியல் 227

பின்னிணைப்பு 234

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



# வரைபடப் பட்டியல்

**வரைபடம்** **பக்கம்**

3.1 ஆய்வு கட்டமைப்பு 59

3.2 ஆய்வு நடைமுறை 69

3.3 கோட்பாடு வடிவமைப்பு 70

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# அட்டவணைப் பட்டியல்

**அட்டவணை** **பக்கம்**


4.1 சிவபுராணம் வரிகளில் தளையியல் பகுப்பாய்வுச்சட்டகம் 75

5.1 தளையியல் சிந்தனைக் கேள்வி ஒன்றின் தரவுகள் 177

5.2 தளையியல் சிந்தனைக் கேள்வி இரண்டின் தரவுகள் 180

5.3 தளையியல் சிந்தனைக் கேள்வி மூன்றின் தரவுகள் 183

5.4 தளையியல் சிந்தனைக் கேள்வி நான்கின் தரவுகள் 186

5.5 தளையியல் சிந்தனைக் கேள்வி ஐந்தின் தரவுகள் 189

5.6 தளையியல் சிந்தனைக் கேள்வி ஆறின் தரவுகள் 192

5.7 தளையியல் சிந்தனைக் கேள்வி ஏழின் தரவுகள் 195

5.8 தளையியல் சிந்தனைக் கேள்வி எட்டின் தரவுகள் 198

5.9 தளையியல் சிந்தனைக் கேள்வி ஒன்பதின் தரவுகள் 201

5.10 தளையியல் சிந்தனைக் கேள்வி பத்தின் தரவுகள் 204


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# குறிவரைவுப் பட்டியல்

**குறிவரைவு** **பக்கம்**


| | | |
|---|---|---|
| 5.1 | தளையியல் சிந்தனைக் கேள்வி ஒன்று | 178 |
| 5.2 | தளையியல் சிந்தனைக் கேள்வி இரண்டு | 181 |
| 5.3 | தளையியல் சிந்தனைக் கேள்வி மூன்று | 184 |
| 5.4 | தளையியல் சிந்தனைக் கேள்வி நான்கு | 187 |
| 5.5 | தளையியல் சிந்தனைக் கேள்வி ஐந்து | 190 |
| 5.6 | தளையியல் சிந்தனைக் கேள்வி ஆறு | 193 |
| 5.7 | தளையியல் சிந்தனைக் கேள்வி ஏழு | 196 |
| 5.8 | தளையியல் சிந்தனைக் கேள்வி எட்டு | 199 |
| 5.9 | தளையியல் சிந்தனைக் கேள்வி ஒன்பது | 202 |
| 5.10 | தளையியல் சிந்தனைக் கேள்வி பத்து | 205 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இயல் 1

# அறிமுகம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.1 முன்னுரை

இவ்வியலில், ஆய்வின் தலைப்பைச் சார்ந்து நுவலக்கூடியப் பகுதியாக அமைகின்றது. இதில், ஆய்வின் பிண்ணனி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு முக்கியத்துவம், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வு எல்லை, ஆய்வுச் சான்றுகள், முக்கியச் சொற்களஞ்சியம் போன்றவை விளக்கப்பட்டுள்ளன.

சிவபெருமானை முழுமுதற் பரம்பொருளாக ஏற்ற சமயம் சைவமாகும். சிவபெருமானைப் பற்றிய குறிப்புகள் தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன. சிந்து நதிக்கரையில் வாழ்ந்த திராவிடத் தமிழர் காலம், தொல்காப்பியத்திற்கும் முந்தியதாகும்(நாகப்பன்,ஆ.2012:103).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சிந்துவெளியில் பல்வேறு வழிபாட்டு நெறிகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பினும் அவற்றுள் சிறந்து விளங்குவது சிவவழிபாடு என்பது குறிப்பிடத்தக்கது(வெள்ளைவாரணன்,க.2016:3). வரலாற்றுத் தமிழறிஞர்கள் பக்தி இலக்கியத்தின் பொற்காலமாகக் குறிப்பது ஏழாம் நூற்றாண்டு முதல் பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரையாகும். அக்காலக்கட்டத்தில் சைவ சமயம் செழுமை பெற்றிருந்தது. அதன் தொடர்ச்சியாகப் பதின்மூன்றாம் நூற்றாண்டில் சைவ சித்தாந்தம், சித்தாந்தக் கோட்பாடாகப் பதினான்கு சாத்திரங்களின் வாயிலாக வளர்ச்சி கண்டது. சைவ சித்தாந்தத்தை விளக்கியுரைக்கும் இச்சைவ சித்தாந்தச் சாத்திர நூல்களில் மெய்கண்டாரின் சிவஞானபோதமும் முக்கிய நூலாகத் திகழ்கின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பொதுவாகச் சைவ சித்தாந்தம், பொருள்களை மூன்றில் அடக்கிக் கூறுவது அறிஞர்களின் மரபு. அவை தளை, உயிர், இறைவன் என்னும் முப்பொருள் உண்மைகள் என வழங்கப்படுகின்றது. பாசம் எனப்படும் தளையில், மூன்று கட்டுகள் உள்ளன. அவை யாதெனில், ஆணவம், கன்மம், மாயை எனப்படும் மும்மலங்கள் ஆகும். எட்டாம் நூற்றாண்டில், மாணிக்கவாசகர் பாடிய எட்டாம் திருமறை நூல், திருவாசகம் எனப்படுகின்றது. சிவபுராணத்தில் காணப்படும் பாடல் வரிகளில் தளையியல் கண்டறிந்து, மும்மலங்களைக் களைய சிவஞானபோதம் கோட்பாடு காட்டும் சாதன இயலில் பகுக்கப்பட்டுள்ள உயிரியல், மலத்தியல், மாயையியல் எவ்வகையில் துணை செய்யும் என்பதனை ஆய்வாளர் ஒப்பீட்டு முறையில் கண்டறிய முனைகின்றார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.2 ஆய்வுப் பின்னணி

சைவ சமயம் என்பது எல்லாவுயிர்களிடமும் இறைவன் அத்துவிதமாய் ஒன்றாயும், உடனாயும், வேறாயும் உறைந்துள்ளதால் அவ்வுயிர்களிடத்து ஒவ்வொரு மனிதரும் அன்பு செலுத்த வேண்டும் என வலியுறுத்தி அம்மனிதனைப் பக்குவப்படுத்தும் அன்பு சமயமாய் விளங்குகின்றது. சைவ சமயம், எல்லா உயிர்களிலும் தழுவி நின்று, அவற்றை உய்ய வைக்கும் அன்பு மதமாகக் கருதப்படுகின்றது. திருமந்திரத்தின் அன்புடைமை அதிகாரத்தில்,

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்"

(திருமந்திரம் 10:தந்.1.18.270)

கண்ணுக்குப் புலப்படாத இறைவன் மக்கள் மனதில் வெளிப்படும் அன்பூற்றாகக் காட்டப்பட்டுள்ளது. உயிர்களுக்கு அன்பு செலுத்துவதையே இறைவழிபாடாய்த் திகழ்கிறது(நாகப்பன்.ஆ,2012:85).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சைவத்தை இரு கோணத்தில் ஆராய்ந்துணர வேண்டும். முதலில் சைவம் என்கிற சமயம். அடுத்து, சித்தாந்தம் என்னும் அறிவுத்தத்துவம். முன்னது, இறைவனை நோக்கிய உணர்வின் வெளிப்பாடு. பின்னது, இறைவனை நோக்கிய தத்துவார்த்த அறிவின் வெளிப்பாடு என அறியப்படுகின்றது.

சைவ சமயம் மெய்யியல் காணும் அறிவார்ந்த சிந்தனைக்குத் தடை விதிக்கவில்லை. எங்கெல்லாம் சிந்தனைக்கு இடம் கிடைத்தபோதும் சான்றோர் பெருமக்கள் ஆழ்ந்து சிந்தித்தனர். தெளிந்த நோக்கும் போக்கும் கிடைக்கும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வரை தர்க்கம் புரிந்தனர். அதன் விளைவாக இறை, உயிர், உலகம் பற்றிய ஆழ்ந்த கருத்துகள் திண்மையும் வடிவமும் பெற்றன. இவ்வாறு திரண்ட கருத்துகளின் தொகுப்பே சித்தாந்தம் என்றனர் (நாகப்பன்,ஆ.2012:5).

தென்குமரிமுதல் இமயம் வரையிலான பாரத நாட்டில் வாழ்ந்த தொன்மை மக்களாகிய தமிழ்க்குடியினரின் குடும்ப வாழ்க்கையிலும் சமுதாய வாழ்க்கையிலும் அகமும் புறமுமாகச் செழித்துத் தோன்றியது சைவசித்தாந்தம் ஆகும். எனினும், சைவசித்தாந்தக் கொள்கையானது பிறகு வடநாட்டின் வழிவந்த வேத உபநிடதங்களின் சார்பு பெற்று வளர்ச்சியடைந்த காலக்கட்டத்தைத் திருமூலர் காலம் எனக் கொள்ளலாம் என்று ஆய்வாளர், க.வெள்ளைவாரணனார் தம் 'சைவ சித்தாந்த சாத்திர வரலாறு' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார் (வெள்ளைவாரணன்,க.2016).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சைவசித்தாந்தம் என்னும் சொல்வழக்கு முதன் முதலில் திருமூலர் அருளிய திருமந்திரத்தில்தான் காணப்படுகிறது. எட்டாம் தந்திரத்தில், ஆறந்தம் பகுதியில், தலைவனாகிய முழுமுதற் பொருளை அடைதல் சித்தாந்த நெறி என்பதை,

"நித்தம் பரனோடு உயிர் உற்று நீள்மனஞ்
சத்த முதல்ஐந்துத் தத்துவத்தால் நீங்கிச்
சுத்த மசுத்தந் தொடரா வகை நினைந்
தத்தம் பரன்பால் அடைதல் சித்தாந்தமே"

(திருமந்திரம் 10:தந்.8:15:2373)

என்னும் மந்திரம்வழி அறிய முடிகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சைவம் சிவத்தொடர்புடையது என்று பொருள். சிவனைச் சைவன் என்றும் குறிப்பிடுவர். இக்கூற்றுக்குச் சான்றாகத் திருவாசகத்திலுள்ள கீர்த்தித் திருவகவலில்,

"ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்
ஐயா றதனிற் சைவ னாகியும் ....."

(திருவாசகம் 8.2:84-85)

என்னும் மாணிக்கவாசகரின் வரிகள் மெய்ப்பிக்கும்.

சைவம் வளர்த்துத் திருவாசகம் அருளிய மாணிக்கவாசகர் பாடல்கள் பரந்து பட்டதாகவும்; ஆழ்ந்து நுட்பமாகவும் ஒட்பமாகவும் பாடப்பட்டுள்ளது. மாணிக்கவாசகர் இப்பிரபஞ்சம் முழுவதும் சிவத்தைக் கண்டு போற்றியிருக்கிறார். திருவாசகம் நூலில் முதலில் தொகுக்கப்பட்ட சிவபுராணத்தில், மாந்தரின் பரிணாம வளர்ச்சியை,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்..."

(திருவாசகம்:8:சிவபுராணம்1:26-29 )

என்னும் வரிகளில் காணமுடிகின்றது.

ஆகம அடிப்படையிலான சைவ சமயம், பன்னிரண்டாம், பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில் வளர்ச்சி அடைந்து வந்துள்ளதை வரலாற்று அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். சுந்தரமூர்த்தி நாயனார், ஆகமங்களைப் பற்றி தம்பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். திருமூலரின் திருமந்திரத்திலும், ஆகமங்களின் குறிப்புகளைக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


காணமுடிகின்றது. திருவாசகம் அருளிய மாணிக்கவாசகரும், ஆகமங்கள் சிவபெருமானால் மக்களுக்கு உணர்த்தப்பட்டவை என்று குறிப்பிட்டுள்ளார்.

சைவம், சிவத்தோடு தொடர்புடையது என்பதை அறிகிறோம். சித்தாந்தமே முடிந்த முடிபு என்று சைவச் சான்றோர் குறிப்பிட்டுள்ளனர். சைவத்தின் முடிந்த முடிபினை விளக்குவது 'சைவ சித்தாந்தமே' என வலியுறுத்தி உள்ளனர் (சாம்பசிவனார்,ச.1997:14-15).

தமிழருள் மிகப் பெரும்பான்மையினரின் சமயமாகப் பல நூற்றாண்டுகளாக விளங்கி வருவது இந்து மதம் ஆகும் (வேலுப்பிள்ளை,ஆ.2011:176). இந்து மதத்திலும் சைவ சித்தாந்தத்தைப் பின்பற்றுபவர்களில் பெரும்பான்மையோர் தமிழ்மொழி அறிந்தவர்களாக இருக்கின்றனர். ஏனெனில், சைவத்தைப் போற்றும் பன்னிரு திருமுறை பாடல்கள் யாவற்றுக்கும் மூலம் தமிழ்மொழியில் இயற்றப் பட்டிருக்கின்றது. சைவ சமயத்தின் தத்துவார்த்த அறிவின் முடிபாகச் சித்தாந்தம் திகழ்கின்றது. சித்தாந்தக் கோட்பாடும் அதன் நெறியும் சைவத்திற்கே உரிய தனிச்சிறப்பு ஆகும். எனினும், சைவ மரபினர் பெரும்பாலோர் சைவ சித்தாந்த நெறியைப் பின்பற்றுகின்றனரா என்கிற கேள்வி எழுகின்றது. இந்து சமயத்தைப் பின்பற்றுபவர்களில், அதனினும் குறிப்பாகச் சைவ சமயத்தைப் போற்றுபவர்களில் சித்தாந்தத் தத்துவக் கோட்பாடுகளில் தெளிவு பெற்றிருப்பவர்கள் குறைவாகவே காணப்படுகின்றனர்.

சைவசித்தாந்தம் மூன்று உண்மைகளை நித்திய பொருள்களாக் கொள்ளும் (கலைவாணி,இரா.1998:2). சைவ சித்தாந்த நெறியின் முடிந்த முடிபாகக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கொள்ளப்படுவது முப்பொருள்களான இறை(பதி), உயிர்(பசு), தளை(பாசம்) ஆகியனவாகும். அவற்றுள் பாசம் (தளை) எனப்பெறுவது ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தில் சைவசித்தாந்தக் கருத்துகள் பொதிந்துள்ளன என்பதைச் சான்றுகளுடன் மெய்ப்பிக்க சைவ சித்தாந்தக் கோட்பாடுகள் துணை புரிகின்றன.

முதன் முதலில், சைவ சித்தாந்த கோட்பாட்டினை முறைப்படி வகுத்துக் காட்டியவர், மெய்கண்டார் ஆவார். மெய்கண்டார், பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய சைவ சித்தாந்தியாவார். இவர் எழுதிய நூல், 'சிவஞானபோதம்' என்று வழங்கப்படுகின்றது. சிவஞானபோதம், சைவ சித்தாந்தத்தின் மூலப் பொருளாகக் கருதப்படுகின்றது(கிருஷ்ணவேணி.ஏ.என்,2008:65). ஆயினும், மெய்கண்டார் இயற்றிய சிவஞானபோதம் என்னும் நூல், பன்னிரண்டு வடமொழிச் சூத்திரங்களின் மொழிப்பெயர்ப்பு என்று க.அ. நீலகண்ட சாஸ்திரி என்னும் திராவிடச் சிந்தனை ஆய்வாளரின் கூற்று(நீலகண்ட சாஸ்திரி,க.அ.2013:132). அக்கூற்றை மறுத்துச் சிவஞானபோதம் மூல செந்தமிழ் நூலே, மொழிபெயர்ப்பு நூலன்று எனும் கருத்து நற்றமிழுக்கும் நன்னெறிக்கும் அளப்பறியா தொண்டுகள் ஆற்றிய மறைமலையடிகளாரால் ஆழமாக நிறுவப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கினுள் மிக முக்கியமானதாகவும், தலை சிறந்ததாகவும் விளங்கும் 'சிவஞானபோதம்' என்னும் செழுந்தமிழில் உருவான மூல நூலாகும். கி.பி 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த, திருவெண்ணெய் நல்லூரைச் சார்ந்த சுவேதனப் பெருமாள் என்னும் இயற்பெயருடைய ஆசிரியர் 'மெய்கண்ட தேவநாயனார்' என்பவர் இந்நூலை இயற்றியுள்ளார் (மறைமலையடிகள்,2005:11).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மேலும், சிவஞானபோதம் வழங்கிய மெய்கண்டாரின் சந்தானப்பரம்பரைதான் 'திருக்கயிலாய பரம்பரை' என்று இன்றுவரை வழங்கப்பெற்றுள்ளது. இதுவே, இருகிளைகளாய்த் தருமபுரத்தில் ஒன்றும், திருவாடுதுறையில் ஒன்றுமாக இரண்டு ஞான பீடங்களாக நிறுவப்பட்டுச் செயல்படுகின்றது (சுப்புரெட்டியார்,ந.2010).

பதின்மூன்றாம் நூற்றாண்டில் தழைத்த சைவ சித்தாந்தமும் சிவஞானபோதத் தத்துவக் கோட்பாடுகளும் இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டு சைவர்களிடம் குறிப்பாகச் சமய ஆசிரியர்களிடம் எவ்வாறு சிவபுராணத்தின் தளையியல் கொள்கைகளும் புரிதலும் வெளிப்பட்டுள்ளது என்பதை அறிய ஆய்வாளர் முனைந்துள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.3 ஆய்வுச் சிக்கல்

சைவ மரபினைத் தழுவியவர்கள் சைவர்கள். அவர்களில் ஒரு பிரிவினர் உணர்வின் வழி பக்தி மார்க்கத்திலும் மற்றொரு பிரிவினர் அறிவு சார்ந்த சித்தாந்த மார்க்கத்திலும் இறையை அடைய முற்பட்டனர். சைவ சித்தாந்தம் தத்துவப் பிரிவாக மட்டுமல்லாமல், சமய மார்க்கமாகவும் திகழ்கிறது. சமயம் என்பது மனிதனை அறம் சார்ந்து, ஒழுங்கமைவுக்கு உட்பட்ட வகையில் வாழ வழிகாட்டுகிறது. மாறாகத் தத்துவம், அறிவுக் கோட்பாட்டின்வழி அறியப்பட்ட உண்மைகளையும், விளக்கங்களையும் தெளிவான முடிபுகளையும் கொண்டுள்ளது. அவ்வகையில், சமயத்தையும் தத்துவக் கோட்பாட்டியல் கருத்துக்களையும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



ஒற்றுமை படுத்துவதில் சைவ சித்தாந்த சாத்திரங்கள் வழி காட்டுகின்றன(கிருஷ்ணவேணி,ஏ.என்.2008:49).

சிவத்தைச் சார்ந்தவர்கள் சைவர்கள். சைவம் என்னும் சமயம் அநாதியானது. அநாதி என்பது தொடக்கக் காலம் தொட்டு என்றும் தொன்மையானது என்றும் பொருள் கொள்ளத்தக்கது. அநாதி என்பதை ஆதி அற்றது அல்லது தோற்றம் இல்லாதது என்றும் குறிப்பிடலாம்.

தமிழ்க்கூறும் சைவ நல்லுலகம் இன்னும் உயிர்ப்புடனும், உறுதியுடனும், தன்னம்பிக்கையுடன் உயர்ந்த மெய்ஞ்ஞானக் கருத்துகளைப் பாதுகாத்தும் நேசித்தும் வருகிறதென்றால் அதற்கு வித்திட்டவர்கள் அருள் ஞானியர் பரம்பரையினர் என்றால் மிகையில்லை. ஏனெனில், சந்தேகமின்றி இன்றும் அவர்கள் அருளிச் சென்ற மறைஞான நூல்களும், திருமுறைப் பதிகங்களும் மனதை இறைவனிடம் ஒன்றச் செய்யும் வல்லமை பெற்றுள்ளன.

சைவ சித்தாந்த சாத்திரம் முப்பொருள் உண்மைகளைப் பற்றி விவரிக்கும். முப்பொருள் என்பவை முறையே, இறை, உயிர், தளை என்பனவாம். அவை பதி, பசு, பாசம் என்றும் பொதுவாக வழக்கில் கூறப்படுகின்றது. இவை என்றும் உள்ள பொருள்கள்(சுப்புரெட்டியார்.ந,2010:37).

மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் சிவபுராணம் முக்கியத்துவம் வாய்ந்ததாய் அமைந்துள்ளது. ‘சிவபுராணம்’ என்னும் சொற்றொடர் ‘சிவனது பழமை’ என்னும் பொருளை உணர்த்தும் என்று மறைமலையடிகள் தமது ‘திருவாசக விரிவுரை’,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பூம்புகார் பதிப்பக வெளியீட்டு நூலில் குறிப்பிட்டுள்ளார் (மறைமலையடிகள், 2003:5). தற்கால பதிப்புகளிலும் சிவபுராணப்பாடலுக்கு முன் 'சிவனது ஆநாதி முறைமையான பழமை' என்று சான்றோர் விரித்துக் கூறிய சொற்றொடர் இன்றும் அச்சிடப்பட்டு வரும் முறையைக் காணலாம். எனவே, அநாதியான சைவ சமயத்தை ஏற்றுச் சிவபெருமானை முழுமுதற் கடவுள் என உணர்ந்து வழிபடுபவர்களே சைவர்கள்.

சைவமும் சித்தாந்தக் கோட்பாடுகளும் தமிழ்நாட்டில் தழைத்து வேரூன்றிய காலம் பன்னிரெண்டிலிருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டு என்று குறிப்பிடலாம். தமிழ்நாட்டிலிருந்து பல்வேறு சூழல்களில் வேறு நாடுகளுக்குச் சைவர்கள் புலம் பெயர்ந்துள்ளனர். இரண்டாம் உலகப் போருக்குப் பின் இங்கிலாந்து ஆட்சியின் கீழ் உள்ள பல நாடுகளுக்குத் தமிழ்நட்டுத் தமிழர்கள் கொண்டு செல்லப்பட்டனர்.

அவ்வகையில், சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு பதினெட்டாம் நூற்றாண்டில், அன்றைய மலாயாவுக்கு ஆங்கிலேயர்களால் இந்தியர்கள் குறிப்பாகத் தமிழர்கள் கொண்டுவரப்பட்டனர் என்பது வரலாறு. ஆங்கிலேயர் ஆட்சியில் மலாயாவின் மேம்பாட்டுக்காக இந்தியர்கள் சஞ்சிக் கூலிகளாகவும், பின்னர் 'கங்காணி' முறையிலும், மேலும் பலர் சொந்த செலவிலும் மலாயாவிற்கு வந்தனர் (மலேசியாவில் 200 ஆண்டுத் தமிழ்க்கல்வி வரலாறு:சிறப்பு மலர்,2016:20) அவர்களில் பெரும்பாலோர் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள். அவர்கள் தென்னாட்டுத் தமிழர்களாவர். பிழைப்புக்காக வந்தவர்கள் தங்கள் சமயம், கலை, பண்பாட்டையும் உடன் கொண்டு வந்தனர். அவர்களுள் பெரும்பான்மையோர் சைவ சமயப்பிரிவைச் சார்ந்தவர்கள். அவர்களுக்குத் தமிழ்நாட்டுடன் நல்ல தொடர்பும் இருந்ததால்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அன்றைய மலாயாவில் கோயில்கள் கட்டப்பட்டு வழிபாட்டிலும் பக்தி மார்க்கத்திலும் ஈடுபடத் தொடங்கினர். சைவப் பெரியார்கள் தமிழ்நாட்டிலிருந்து இங்கு வந்து அவ்வப்போது சமய உரை நிகழ்த்தியுள்ளனர். அவ்வாறு சைவ சமயத்தைத் தாமே சுயமாக நூல்கள் வழி வாசித்துணர்ந்தும் தமிழ்நாட்டுக்குச் சென்றும் சைவ ஆகம மடங்களில் பாடம் கற்றும் சைவ சித்தாந்தத்தைப் பற்றி தெரிந்து கொள்ள முயன்றனர். இருப்பினும், அவ்வழியில் முறையாகச் சித்தாந்தைச் சைவம் கற்றோர் மிகச் சிறிய எண்ணிக்கையில் இருந்தனர். அதன் விளைவாக மலேசியாவில் பெரிதாகக் கோட்பாட்டின் அடிப்படையில் சைவ சித்தாந்தம் பரவியது என்று கூறிவிட இயலாது.

ஆகமவிதிப்படி அமைக்கப்பட்ட கோயில்களில் ஓதுவார்கள் முறையே திருமுறை பாடல்கள் ஓதிவந்தாலும் அது கற்றோர் மத்தியில் மட்டுமே பிரபலம் அடைந்தது என்றால் மிகையாகாது. ஆண்டுதோறும் இந்து சமய அமைப்புகள் 'திருமுறை பாடல் ஓதும் போட்டிகள்' தொடர்ந்து நடைபெற்றாலும், திருமுறைப் பாடல்களை 'உணர்ந்து ஓதுவாரில்லை' என்கிற கருத்து, சமயவாதிகளிடம் இருந்தது. அவ்வப்போது சைவ சமயச் சொற்பொழிவாளர்கள் ஆற்றும் உரைகளிலும் வெளிப்பட்டன. இந்நிலையில் சிவஞான அறிவும், சித்தாந்தக் கொள்கையும், கோட்பாடும் பெரிதாக மலேசிய சைவர்களிடையே வளர்ச்சி காணவில்லை என்பதே உண்மை நிலை.

வரலாற்றைப் பார்க்கும் போது ஓர் உண்மை வெளிப்படுகின்றது. ஏழாம் நூற்றாண்டிலிருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை சைவ பக்தி மார்க்கமும் அதன் தொடர்ச்சியாக 'சைவ சித்தாந்தம்' அறிவார்ந்த அறிவியல் நோக்கிலும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தளை, உயிர், இறைவன் என்றும் முப்பொருள் உண்மைகளை மிகத் தீவிரமாகத் தங்கள் படைப்புகளைச் சிவநேய அன்பர்கள் நூல்கள், பதிகங்கள், சிவனருட்பாக்கள் என்று வழங்கியுள்ளனர். முதலில், சைவ சித்தாந்தக் கருத்துகளின் கருவூலமாக விளங்கும் பன்னிரு சைவத் திருமறைகள் பக்தி உணர்வு வழி சைவ சமயத்தையும் சித்தாந்தக் கொள்கைகளையும் புலம் பெயர்ந்த சைவர்கள் பரப்பியுள்ளனர். அதன் தொடர்ச்சியாகச் சைவ சித்தாந்தம் எனும் கொள்கையைத் தத்துவக் கோட்பாடாக வரையறுத்து அறிவியல் நோக்கோடு பரப்புவது அவ்வளவு எளிதாக நடைபெறவில்லை. அக்காலக் கட்டத்தில் சித்தாந்தச் சாத்திரங்களை ஆழக்கற்றவர்களும் மிகக் குறைவு. எனவே, சித்தாந்தக் கோட்பாடும் சிந்தனையும் சைவ அன்பர்களிடையே அவ்வளவு விரைவாகப் பரவவில்லை.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டிலும் சைவர்கள் பன்னிரு திருமறைகளையும் பதினான்கு சாத்திரங்களையும் உணர்ந்து சித்தாந்த கோட்பாட்டினைக் கற்றுத் தெளிவு பெறுபவர்களும் மிகக் குறைவு. அவ்வாறு மெனக் கெடுதல் என்பது பகீரத முயற்சியாகக் கருதப்படுகின்றது. அதற்கு மனத்திட்பத்துடனும் மதிநுட்பத்துடனும் கற்றறிய விவேக முனைப்பும், தன்னார்வமும், முறையான ஆசிரியர் வழிகாட்டலும் தேவைப்படுகின்றது. சித்தாந்தச் சைவம் பயில முறையான வகுப்பிற்குச் செல்ல வேண்டும் என்பது பொது விதி. ஆயினும், சைவச்சமயம் சார்ந்தவர்களின் தற்கால வாழ்க்கைச் சூழல் அதற்குப் பெரும் முட்டுக்கட்டையாக இருக்கின்றது. தமிழ்நாடு என்றில்லாமல் உலகம் முழுதும் பரவியுள்ள சைவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களில் தலையாயச் சிக்கல் இஃது எனலாம். அதில் மலேசியச் சைவர்கள் விதிவிலக்கல்ல.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


புலம் பெயர்ந்த காலக்கணக்கின்படி, மலேசியச் சைவர்கள் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக அரசாட்சி மாற்றங்கள் காரணமாகவும், குருகுல வசதி வாசங்கள் இல்லாமலும், சமய ஆசிரியர்கள் மூலமாகவும், பெற்றோர்கள் வழியிலும், சுயக்கற்றல் வழியிலும் சமய நெறிகளை உணர்ந்து கொள்ளக்கூடிய வழிகள் மட்டுமே இருந்துள்ளன. அடிப்படை சமயக் கல்விக்கூடங்கள், எளிமையான பாடத்திட்டங்கள், சமய சங்கங்களின் ஒருமித்த பாடத்திட்டங்கள் குறுகிய வட்டாரத்தைச் சார்ந்தே இருப்பதனால், அவை பெரிதளவில் மக்களைச் சென்று அடையவில்லை.

திருமுறை பாடல்களையும் திருவாசகப் பதிகங்களையும் பொருள் உணர்ந்து பாடுபவர்கள் மிகச் சொற்பமானவர்கள். இச்சிக்கலுக்கு ஓரளவு தீர்வு காணும் வகையில் ஆய்வாளர் முனைந்துள்ளார். அதிகம் சிரமம் ஏற்படுத்தாமல் தமிழ் தெரிந்த சைவர்கள் சில பதிகங்களைப் பாடும்போதே அதில் காணப்படும் முப்பொருள் உண்மைகளை உணர்ந்து கொள்ளவும் அதன்வழி சிவஞானப்போதக் கோட்பாட்டினைக் கண்டுகொள்ளவும், விழிப்புணர்வு பெறவும், பின்பு சாதன முறையில் ஆணவம், கன்மம், மாயை ஆகிய தளைகளைக் களையவும் ஆய்வாளர் ஒரு வழிமுறையைச் சைவர்களுக்கு மீட்டுணர்வுவழி எடுத்துரைக்கின்றார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும், மாணிக்கவாசகரின் செய்யுள்களைப் படிக்கும்போது தற்காலச் சமுதாயத்தில் பெரும்பாலோர் பாடலின் உட்கருத்தையும் அதில் புதைந்துள்ள சித்தாந்த கொள்கைகளையும் கோட்பாடுகளையும் விளங்கிக் கொள்ளாமல் படிக்கின்றனர். இது மெய்ஞ்ஞானப் புரிதலுக்குப் பெரும் சிக்கலாகவே காணப்படுகின்றது. பாசங்களான தளைகளே உயிரைக் கட்டிப்போட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தளைகளைக் கண்டுபிடித்து அதிலிருந்து விடுபட்டால் இறையை உணர்ந்து கடைத்தேற வழிகாண முடியும். எனவே, இச்சிக்கலைக் களைய ஒரு முயற்சியாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## 1.4 ஆய்வு நோக்கம்

இவ்வாய்வானது கீழ்க்காணும் நோக்கங்களை அடைய நடத்தப்படவுள்ளது.

i. மாணிக்கவாசகரின் சிவபுராணத்தில் சிவஞானபோதம் கோட்பாட்டின் அடிப்படையில் காணப்படும் தளையியலைக் கண்டறிதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ii. மாணிக்கவாசகரின் சிவபுராணத்தில் சிவஞானபோதம் கோட்பாட்டின் அடிப்படையில் கண்டறிந்த தளையியலைப் பகுத்தாராய்தல்.

iii. மாணிக்கவாசகரின் சிவபுராணத்தில் உள்ள தளையியலைச் சமய ஆசிரியர்கள் எவ்வாறு உணர்ந்துள்ளனர் என்பதைப் பகுப்பாய்வு செய்தல்.

## 1.5 ஆய்வு வினா

இவ்வாய்வானது கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை காணும் வகையில் அமையப்பெறவுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


i) மாணிக்கவாசகரின் சிவபுராணத்தில் சிவஞானபோதம் அடிப்படையில் தளையியல் காணப்படுகின்றனவா ?

ii) மாணிக்கவாசகரின் சிவபுராணத்தில் சிவஞானபோதம் கோட்பாட்டின் அடிப்படையில் காணப்படும் தளையியல் கருத்துகள் யாவை ?

iii) மாணிக்கவாசகரின் சிவபுராணத்தில் உள்ள தளையியலைச் சமய ஆசிரியர்கள் எவ்வாறு உணர்ந்துள்ளனர் ?

## 1.6 ஆய்வு முக்கியத்துவம்

இன்றையக் கல்வி உலகில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து வகையான ஆய்வுகளும் அதற்குரிய சிறப்புகளைக் கொண்டிருக்கின்றன. மேலும், ஆய்வுகளின் வழியே புதிய மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் உருவாக்க முடியும் என்பது ஆய்வாளர்களின் எதிர்பார்ப்பாகும். இவ்வாய்வானது, கல்வித்துறை, பக்தி இலக்கியத்துறை, மெய்யியல் துறை ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பெரும் பயனாக அமையும். இன்றைய தனிநபர், குறிப்பாக இளையோர்கள் சைவ சித்தாந்தத்தின் முப்பொருள் உண்மைகளான இறையியல், உயிரியல், தளையியல் சார்ந்த பொதுவான கருத்துகளையும், குறிப்பாக சிவபுராணத்தில் தளையியல் சார்ந்த ஆழமான கருத்துகளையும் தெரிந்து கொள்ள முடியும். மேலும், தனிநபராக இளையோர், சிவபுராணத்திலுள்ள சித்தாந்த கருத்துகளைக் கடைபிடிப்பதன் வழி தத்தம் குடும்பத்திலும் சிந்தனை மாற்றங்களையும் கொண்டு வர முடியும். எனவே, இந்தத் தொடர்ச்சியான தளையியல் பற்றிய சிந்தனைப் பகிர்வுகளால், அவர்கள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சார்ந்த சமூகத்திலும் விளைபயன்மிக்க மாற்றங்களை உருவாக்க முடியும். சைவ சித்தாந்த சிந்தனைகள் தொடர்ந்து பேசப்பட்டும், விவாதிக்கப்பட்டும், கருத்தாடல்கள் வழி பகிரப்படுமேயானால், இந்து சமூகத்தில் காலங்காலமாக இருந்துவரும் சமய தெளிவின்மையும், மூட நம்பிக்கைகளும், சமயத்திற்கு முரணான செயற்பாடுகளும் குறைய வாய்ப்புள்ளது.

இவ்வாய்வானது சமய ஆசிரியர்களுக்குச் சைவசித்தாந்தக் கோட்பாடுகள், மெய்கண்டாரின் 'சிவஞானபோதம்' வழங்கும் சாதன இயலின் பொருண்மைகளான உயிரியல், மலத்தியல், மாயையியல் பற்றிய தெளிவும் புரிதலும் மேம்படும். சிவஞானபோதக் கோட்பாட்டின் அடிப்படையில் சிவபுராணத்தில் சிவபுராணப் பாடல் வரிகளில் காணப்படும் தளையியலைக் கண்டறிந்து பின்பு பகுத்தாராயப்படும். அவ்வாறு திரட்டியக் கருத்துகளைச் சைவ சித்தாந்தம், அறிவார்ந்த புதிய கருத்துக்களைச் சமய ஆசிரியர்கள் வழி மாணவர்களுக்குக் குறிப்பாக இளைய சமூகத்தினர்க்கு எடுத்து விளக்குவதன் வழி இவ்வாய்வு முக்கியத்துவம் பெற்றதாய் அமையும்.

இந்த ஆய்வு மெய்யியலைச் சார்ந்த தரப்பினர்க்கும் ஆய்வாளர்களுக்கும் புதிய கருத்துகளையும் நன்மைகளையும் தரக்கூடும் என ஆய்வாளர் நம்பிக்கை கொண்டுள்ளார் . முக்கியமாக மலேசியாவில் இடைநிலை, உயர்நிலை மாணவர் சமூகத்திற்கு மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகத்தில் சைவ சித்தாந்த கருத்துகள் பொதிந்து உள்ளதைச் சிவஞானபோதம் கோட்பாடுகளைக் கொண்டு தெளிவு கண்டு பயனடைவர். மலேசிய சைவர்களுக்குப் பொதுவாக இவ்வாய்வு புதிய கருத்துகளையும் தளையியல் எனப்படும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மும்மலக் கட்டுகளைப் புதிய கோணத்தில் இனம் கண்டு தளைகளைக் களையும் அணுகுமுறைகளைத் தெரிந்து கொள்ள இயலும் என்பது ஆய்வாளரின் கருத்தாகும்.

## 1.7 ஆய்வு எல்லை

இந்த ஆய்வு சித்தாந்த சிவஞான போதக் கோட்பாடுகளில் 'சாதன இயல்' நூற்பா 7-உயிரியல், நூற்பா 8-மலத்தியல் மற்றும் நூற்பா 9-மாயையியல் மட்டுமே எடுத்தாளப்பட்டுள்ளது.

இவ்வாய்வில், ஆய்வாளர் மாணிக்கவாசகரின் சிவபுராணம் எனும் அகவலைத் தேர்ந்தெடுத்து அப்பாடல்களில் முப்பொருள் உண்மைகளில் ஒன்றான தளையியல் கூறுகளைக் கண்டறிந்து சிவஞானபோதத்தின் சாதன இயலான ஏழாம், எட்டாம், ஒன்பதாம் சூத்திரங்களோடு ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது. தளையாகிய பாசக்கட்டுகளைக் களைவதற்குச் சிவஞானபோத சாதன இயல் துணைபுரிந்தது.

திருவாசகத்தில் ஐம்பத்தோரு பதிகங்கள் உள்ளன. அனைத்துப் பாடல்களையும் இவ்வாய்வில் எடுத்து விவரிக்க இவ்வாய்வுக்கென வழங்கப்பட்ட கால எல்லை இடந்தராது. எனவே, ஆய்வுக்காலத்தின் விரிவைக் கருத்தில் கொண்டு, திருவாசகத்தில் சிவபுராணத்தின் தொண்ணூற்று ஐந்து வரிச் செய்யுள்களை மட்டுமே சிவஞானபோதம் அடிப்படையில் தளையியலும் சார்புக் கருத்துகளும் கண்டறியப்படும். பின்பு சிவஞானபோதத்தின் சாதன இயல்களான

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


உயிரியல் (நூற்பா 7), மலத்தியல் (நூற்பா 8), மாயையியல் (நூற்பா 9) ஆகிய மூன்றையும் கொண்டு ஒப்புநோக்கிப் பகுத்தாயப்பட்டுள்ளது.

மேலும், சைவர்களிடையே சித்தாந்த சிந்தனையை வளர்க்கவும் சிவபுராணத்தில் உள்ள தளையியல் கூறுகளை உணர்ந்துள்ளனரா என்பதைக் கண்டறிய, ஆய்வாளர் கள ஆய்வும் நேர்க்காணலும் நடத்தினார். தரவுகள் அடிப்படையில் கருத்துரைகள் திரட்டினார். அதற்கான தரவுகளைச் சேகரிக்க ஆய்வு வினாக்கேள்விகள் தயார் செய்யப்பட்டது. மலேசியாவின் ஜொகூர் பாரு வட்டாரத்தில் உள்ள பதினொன்று தமிழ் தெரிந்த சமய ஆசிரியர்களிடம் சிவபுராணத்தில் உள்ள தளையியலை அடிப்படியாக் கொண்டு நடத்தப்பட்ட நேர்க்காணல் வழி கிடைக்கப்பெற்ற ஆய்வுத் தரவுகளும் இவ்வாய்வுக்கு உதவின.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.8 ஆய்வுச் சான்றாதாரங்கள்

இவ்வாய்வுக்கான முதன்மைச் சான்றாதார நூல், திருவாசகம் ஆகும். இவ்வாய்வுக்கென மாணிக்கவாசகரின் திருவாசகப் பாடல்களில் முதல் அகவற் பாடல் முக்கிய சான்றாதாரமாய் அமைகின்றது. மேலும், சைவ சித்தாந்தம் கொள்கையையும் கோட்பாட்டையும் விளக்கும் மெய்கண்டாரின் சிவஞானபோதம் இவ்வாய்வுக்குத் துணை செய்யும் மற்றொரு சான்றாதார நூலாக அமைகின்றது. இவ்வாய்வுக்கு மேலும் துணை செய்யும் ஆதாரமாக, முதுகலை ஆய்வேடுகள், நூலக ஆய்வுகள், கருத்தரங்கு ஆய்வுக்கட்டுரைகள்,ஆய்வடங்கல்கள் போன்றவை துணைச் சான்று நூல்களாக இவ்வாய்வுக்கு வலுவூட்டுகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.9 கலைச்சொல் விளக்கம்

இவ்வாய்வின் உள்ளடக்கத்தைப் படிப்போர் இலகுவாகப் புரிந்து கொள்ளும் வகையில் சில கலைச் சொற்களின் விளக்கம் அவசியமாகின்றது. அவ்வகையில் ஆய்வாளர் சில கலைச் சொற்களின் பொருளுணர இங்கு விளக்கியுள்ளார். அவ்வகையில் சைவ சித்தாந்தம், தொடர்பான சொற்கள் விளக்கப்படுகின்றன.

### 1.9.1 சைவ சமயம்

சைவ சமயம் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயமாகும். ஏறத்தாழ ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன் சீர்ப் பெற்றிருந்த சிந்துவெளி நாகரீக காலத்தில் தமிழர் சிவபெருமானை வழிபட்டனர். சைவ சமயத்தின் முக்கிய நூலகள், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களும், பன்னிரெண்டு திருமுறைகளும் ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.2 திருவாசகம் - சிவபுராணம்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் எட்டாம் திருமுறையாக வகுக்கப்பெற்ற, மாணிக்கவாசகர் அருளியது திருவாசகம் ஆகும். திருவாசகம், ஐம்பத்தொரு திருவருட்பதிகங்களைக் கொண்டு திகழ்வது. அவற்றுள் முதற் அகவற்பா சிவபுராணமாகும். திருவாசகத்தில் சொல்லழகும் உண்டு; பொருளழகும் உண்டு.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வாழ்வியலின் பகுப்போடும் விளங்குகின்ற ஒப்பற்ற அருட்பதிகங்கள் கொண்ட தொகுப்புநூல். உலகப் பக்தி நூல்களில் உயர்ந்த தளத்தில் இருப்பது திருவாசகம். மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், அறிவு சார்ந்த பத்தி நூல் எனலாம். அதன் பாடல்களை முழுமையாக ஓதும்போது பத்திச் சுவை நனி சொட்டும். தொடர்த் தொடராகப் பிரித்துச் சிந்திக்கும் போது மெய் அறிவு மாணிக்கக் கல்லாக ஒளிரும். மேலும், மறுமை வாழ்விற்கு நம்மை அருள்கூர்ந்து இட்டுச் செல்வதாகவும், இம்மை வாழ்க்கையை எவ்வாறு வாழ்வாங்கு வாழலாம் என்பதனையும் காட்டுவதாகவும் உள்ளது. அவ்வகையில், திருவாசகம் ஒரு தமிழ்மறை என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.3 சிவஞானபோதம்

சிவஞானபோதம் என்பது சிவத்தை அறியும் அறிவு (ஞானம்). சிவஞானபோதம் என்னும் நூல், ‘மெய்கண்ட நூல்கள்’ என்றுணர்ந்து போற்றப்படும் சித்தாந்த சாத்திரங்கள் வரிசையில் முக்கிய நூலாக விளங்குகிறது.

பன்னிரெண்டு சூத்திரங்கள் கொண்ட இந்நூலில், பொது அதிகாரம், உண்மை அதிகாரம் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்நூல் நான்கு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை முறையே பிரமாண இயல் (நூற்பா 1,2,3), இலக்கண இயல் (நூற்பா 4,5,6), சாதன இயல்(நூற்பா 7,8,9), பயன் இயல் (நூற்பா 10,11,12) எனப்படும். ஒவ்வொரு இயலுக்கும் மூன்று நூற்பா கொண்டு அமைந்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### **1.9.4 சைவ சித்தாந்தம்**

உலகில் உள்ள சமயங்கள் யாவற்றையும் தன்னுள் கொண்டு மேலோங்கி நிற்பது சைவ சித்தாந்தம். இதற்கு முழுமுதற் கடவுள் சிவபெருமான். சிவன் பேரின்ப நிலையினன் எனக் கூறுவது சான்றோர் மரபு. சித்தாந்தம் என்பது சித்தம், அந்தம் என்ற இரு சொற்களால் ஆகி முடிபின் முடிபு என்று பொருள் பெறும். சைவ நூல்களின் முடிந்த முடிபைக் கூறவல்ல நூல்களைச் சைவ சித்தாந்த நூல்கள் ஆகும். அச்சைவ சித்தாந்த நூல்கள் முழுமுதற் இறையாகிய சிவபெருமானை அடைய வழிகாட்டுகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.5 **இறைவன் (பதி)**

இறை அல்லது பதி உயிர்களின் தலைவன் என்று பொருள்படும். பசுபதி என்னும் திருப்பெயர் இறைவனுக்கு உரிய சிறப்புப் பெயராக விளங்குகின்றது. எங்கும் நீக்கமற நிறைந்திருப்பதனால் பதியை, இறைவன் என்கிறோம். அனைத்தையும் இயக்குகின்ற காரணத்தால் பதியை இயவுள் என்கிறோம். அனைத்தையும் கடந்து நிற்கின்றதன்மையால் பதியைக் கடவுள் என்கிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக உள்ளமையால் பதியைப் பரமன் என்கிறோம். இத்தகைய பதியாகிய இறைவன், உயிர்களுடன் கலந்து, ஒன்றி இருக்கின்றார். உயிர்களுடன் ஒன்றாமல் வேறாகவும் இருக்கின்றார். இறைவன் உயிர்களுக்கு அவையவை செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்றபடி வினைகளைத் தந்து அனுபவிக்கச் செய்கின்றார். பதிக்கு வழங்கப்படுகிற இறைவன், கடவுள், இயவுள் என்பன போன்ற சொற்கள் யாவும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


காரணப் பெயர்களாகும். இந்தப் பதியைச் சைவசித்தாந்தம் சிவன் என்றும் பரமசிவன் என்றும் குறிப்பிடுகின்றது. சிவன் என்னும் சொல், சிவத்துடன் தொடர்புடையது. சிவத்தை உடையவன் சிவன். சிவம் என்பதற்கு அகராதி பல்வேறு பொருள்களைத் தந்தாலும் மங்கலம், நலம் என்னும் சொற்களே சிறப்புடையனவாகக் கொள்ளப் படுகின்றன. இறைவனின் எண்குணங்களை தன் வயத்தனாதல், தூய உடம்பின்னாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல், பேரருளுடைமை, முடிவில்லாத ஆற்றலுடைமை, வரம்பற்ற இன்பமுடைமை எனச் சைவசித்தாந்தம் விளக்கும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.6 **உயிர் (பசு)**

பசு என்பது ஆன்மா அல்லது உயிர் எனப்படும். உயிர் அறிவுடைய பொருள். உயிரைச் சித்தாந்தம் 'பசு' என்று கூறும். உயிரை நாம் கண்ணால் காணமுடியாவிட்டாலும் கருத்துக்குப் புலனாவதாக ஏற்றுக் கொள்கின்றோம். உயிர் அறிவுடையது. ஆனால், இறைவனது போன்று பேரறறிவு உடையதல்ல. உயிர், சிற்றறிவு உடையதாயுள்ள பொருள். பசு என்பதற்குப் பாசத்தால் கட்டுண்டு கிடப்பது என்பது பொருள். எப்போதும் பாசத்துடன் சேர்ந்து இருப்பதனால் உயிரானது பசு எனப்படுகின்றது. பதியைப் போல் பசுவும் அநாதி; பாசமும் அநாதி. அநாதி காலம் முதல் பாசத்தால்(தளைகளால்) பிணிப்புண்டு சுய அறிவும், சுய இச்சையும், சுயச் செயலும் இல்லாத நிலையில் இருக்கும் ஒன்றே உயிர். இது, சைவசித்தாந்தம் கூறும் உயிரைப் பற்றிச் சுருக்கமான கொள்கையாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.9.7 **தளை (பாசம்)**

ஆணவம், கனமம், மாயை என்னும் கட்டுகளால் உயிரைப் பிணிப்பது; மும்மலம் எனவும் வழங்கப்படும். பசுவாகிய உயிருக்கும் பாசமாகிய தளைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. உயிர்களைப் பிணித்துள்ளது தளையாகும். இந்தத் தளையானது இறையையும் உயிரையும் போன்று அநாதியானது. தளை அல்லது பாசம் என்று சொல்லப்படுவது ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். மும்மலங்கள் எனப்படுபவையும் இவைதான். ஆணவமலம், கன்மமலம், மாயைமலம் எனவும் இவை சொல்லப்படும். தளை அநாதியானது. தளை உயிர்களைப் பந்தித்து நிற்பது. தளை அறிவில்லாதது. தளை உயிரினுடைய அறிவு, இச்சை, செயல் ஆகியவற்றைப் பிணித்து அஃது இறைவனை அறியமுடியாதபடி மறைத்து நிற்கிறது. மேலும், தளை அறிவித்தாலும் அறிந்துகொள்ள முடியாதது என சைவசித்தாந்தம் பாசத்தின் தன்மைகளைக் குறிப்பிடுகின்றது.

### 1.9.8 **ஆணவம்**

ஆணவம் ஆன்மாவோடு தொடக்கமுதல் இணைந்திருப்பது; உயிருக்கு எந்நேரமும் அறியாமையை விளைவிக்கும் ஒரு பொருள் என்பது அதன் பொது விளக்கம்(நாகப்பன்,ஆ2012:199). ஆன்மாவினுடைய அறிவை மறைத்து அதனை அணுத்தன்மையாக்கிவிடுவதால் அதற்கு ஆணவம் என்று பெயர் ஏற்பட்டது. ஆணவம் அநாதிப் பொருள் ஆகும். எனவே, அஃது அழியாது. மும்மலங்களுள் ஆணவமே வலிமையுள்ளது. ஆன்மா எடுக்கின்ற பிறவிகள் தோறும் கன்மங்களைச்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


செய்து இந்த ஆணவமலத்தின் வைமையைக் குறைக்கும். ஆணவம் இருள்மலம் எனப்படும். இருளானது தான் இருக்கின்றதை நாம் காணும்படி செய்கிறது. மற்றப் பொருள்களை நாம் காணாதபடி நம் கண்ணொளியைப் புற இருளானது மறைத்து நின்றாலும், தான் இருப்பதை நாம் காணும்படி காட்டும். ஆனால், ஆணவமலம் பிறபொருளையும் காட்டாது; தன்னையும் காட்டாது என்று ஆணவமலத்தின் தன்மையைச் சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்றது.

### 1.9.9 **கன்மம்**

உயிரின் செயல்களுக்கேற்ற பயன்களை (நன்மை தீமை இரண்டும்) ஊட்டுவிப்பது. நல்ல செயல் எனில், நல்வினை. தீமை பயக்கும் செயல் எனில், தீவினை எனப்படும். கன்ம மலம் என்பது உயிருடன் சேர்ந்துள்ள ஆணவமலத்தின் ஆற்றலைக் கெடுத்து உயிர்களுக்கு முக்திப்பேற்றினை அளிப்பதற்காக இடையிலே வந்து சேர்ந்ததாகும். இந்தக் கன்ம மலம் நன்மை செய்வதற்கே ஏற்பட்டது. ஆணவமலம் ஆன்மாவை விட்டு நீங்கும்போது கன்ம மலமும் நீங்கிவிடும். இறைவன், கருணை காரணமாக உயிர்களுக்கு வழங்கியதே இந்தக் கன்ம மலம். கன்மம், கருமம் இரண்டும் ஒரே பொருள்படும். செயல் என்றும் அதற்குப் பொருள் உண்டு. சைவசித்தாந்தம் வினை என்று இதனைக் குறிப்பிடும். இந்தக் கன்மம் அல்லது வினையானது மனத்தால் உண்டாவது, வாக்கால் உண்டாவது, உடம்பால் உண்டாவது என்று மூன்று வகையாகச் சொல்கிறது சைவசித்தாந்தம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.9.10 **மாயை**

மாயை உலகுக்கு முதற்காரணம். இறைவன் நிமித்த காரணன். இறைவன் மாயையைக் கொண்டே இந்த உலகைப் படைத்துள்ளார். அனைத்தும் தோன்றுவதற்கும் பின்னர் ஒடுங்குவதற்கும் எது காரணமாக இருக்கின்றதோ அதுவே மாயை எனப்படுகின்றது. உயிர்களைத் தன் வசமாக்கி அவற்றை மயக்கம் கொள்ளச் செய்வதால் மாயை என்னும் பெயர் ஏற்பட்டது. மாயையானது ஆன்மாவினுடைய அறிவை விளக்குவது என்றும், கன்மமானது மாயை ஆன்மாவின் அறிவை விளக்குவதற்குத் துணையாக நிற்பது என்றும், ஆணவமானது ஆன்மாவின் அறிவை மறைப்பது என்றும் சைவசித்தாந்தம் கூறுகின்றது. மாயை அனைவராலும் எளிதில் உணரப்படுவது. உண்மையை மறைக்கும் திரை என்ற பொருள் கொண்டே அது பொதுவாகப் பயன்படுகின்றது. பானைக்கு மண்போல உலகத்திற்கு மூலக் காரணம் மாயை மலம். எனவே, உலகில் காணப்படும் பொருள்கள் யாவும் இதன் காரியமாகும். மாயை மலம் மூன்று வகைப்படும். அவை சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை எனப்படும். இந்த மூன்று மாயைகளிலிருந்துதான் முப்பத்தாறு தத்துவங்களும் தோன்றுகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.10 தொகுப்புரை

இலக்கியம் ஓர் இலக்கை அடிப்படையாகக் கொண்டுள்ள குறிக்கோளாகும். இந்த இயலும் ஆய்வு தொடர்பான முழுமையான பார்வையை வழங்குகின்றது. அந்த வகையில் ஆய்வின் அறிமுக இயலாக இஃது அமைந்துள்ளது.

மாணிக்கவாசகரின் திருவாசகம் என்னும் பக்தி இலக்கியத்தின் நோக்கமும் மெய்யுணர்தலை அறிவதும்; உண்மை ஞானத்தை அடைவதற்கான படிப்படியான முறையாகும். சிவஞானபோத சாதன இயலுக்குத் தடையாக இருப்பவை ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள் ஆகும். எனவே, திருவாசகத்தின் முதல் அகவற்பாவான சிவபுராணத்தில் காணப்படும் தளைகளைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்கான சாதன இயலைப் பயன்படுத்தி உயிரின் அறியாமையைப் போக்க இயலும் எனும் மெய்கண்டாரின் சிவஞானபோதக் கோட்பாடு துணை புரியவல்லது என்பதை ஆய்வாளர் நிறுவுகின்றார்.

இறுதியாக இவ்வாய்வு தொடர்பான கலைச்சொல் விளக்கங்களும் இந்த இயலில் இடம்பெற்றுள்ளன. இவ்வியல் ஆய்வு தொடர்பான தெளிந்த பார்வையை ஏற்படுத்த வகை செய்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi